Arima Nokku
3:4 சனவரி 2010

# அரிமா நோக்கு

ரூ.20

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்
International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு

4:1 ஜனவரி 2010


[illegible] 03
- [illegible]

தொல்காப்பியத்தின்
இலக்கணக் கோட்பாடு
- செ. வை. சண்முகம் 04

புலம்பெயர்வால் புலம்பெயரும்
தமிழ்ப் பெயர்கள்
- ஞா. பாலச்சந்திரன்
- கெ. சர்வேஸ்வரன் 16

நாயகி பருவத்தில் பரகால
நாயகியும் திருஞான
சம்பந்த வல்லியும்
- ச. பிரியா 19

வித்துவசிரோமணி
கணேசையரின்
பாடவேறுபாட்டு ஆய்வுகள்
- ஸ்ரீ பிரசாந்தன் 22

இனவரைவியல் நோக்கில்
சோளர் தொட்டி
- தி அன்புச்செல்வன் 26

சிதம்பரம் கோயில் சாசனமும்
கலிங்கத்துப்பரணியும்
- பா. சிவசங்கரி 31

பழமொழி நானூறு:
இன்றைய நோக்கில்
- ப. மருதநாயகம் 34

மின் குழுமம்: ஒரு பார்வை
- துரை. மணிகண்டன் 43

சார்லட் பெர்கின் கில்மன்
(Charlotte Perking Gilman)
- இரா. பிரேமா 49

வ.சுப. மாணிக்கனார்
விருப்ப முறி: சில பகுதிகள் 54

சர்வதேசக் கவிதையாகும்
சங்கக் கவிதைகள்
- சா. கந்தசாமி 56

சிங்கப்பூரில் சிறுகதை இலக்கியம்:
வரலாறும் முன்னேற்றமும்
- சீதா லட்சுமி 60

தமிழ்மொழி வழங்கிய
இசைச் செல்வம்
- தமிழண்ணல் 67

மற்றும்

நூல், ஆய்வாளர் அறிமுகம்,
கவிதைகள், துணுக்குகள்


# தலைவாயில்

### ஈரோடு தமிழன்பன்

## உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடும்-ஒருமித்த சிந்தனையும்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 சூன் திங்களில் கோவை மாநகரில் நடைபெற உள்ளது. தமிழறிஞர்களுடனும் தமிழ் அமைப்புகளுடனும் கலந்தாய்ந்து முதல்வர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு இம் முடிவை எடுத்துள்ளது.

உலகத் தமிழ் மாநாடுகளை இதுவரை நடத்திவந்த அனைத்துலகத் தமிழாய்வு மன்றம் நடத்தும் மாநாடு என்றில்லாவிட்டாலும், அம்மன்றத்தின் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய நிலையில், உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டைச் சிறப்புற நடாத்தத் தமிழக அரசு முழுவீச்சில் செயற்பாட்டில் இறங்கியுள்ளதையும், அயலக, தாயகத் தமிழ் அறிஞர் பெருமக்கள் கலந்துகொள்ள, ஆய்வுக் கட்டுரைகள் வழங்க, முன்வந்துள்ளதையும் ஊடக உலகம் ஒவ்வொரு நாளும் தெரிவித்து வருகிறது.

பல்கலைக்கழகங்கள்-பொதுஅமைப்புகள்-தொழில், வாணிக உலகங்கள் எனப் பன் முனையாளர்களிலிருந்தும் ஒத்திசைவான எதிரொலிப்புகள், மாநாட்டுக்கு உரிய ஆதரவு எல்லைகளை விரிவுபடுத்தியுள்ளன. தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகளும் இம்மாநாட்டை நடத்துவதற்கான இசைவையும் இணக் கத்தையும் தந்ததோடு-மாநாட்டுக் குழுக்களிலும் இடம்பெற்று விலக்கமின்மையை வெளிப்படுத்தியிருக்கின்றன.

செம்மொழித் தமிழறிஞர்களாகத் தேர்வு செய்யப்பெற்றுள்ள அமெரிக்கத் தமிழறிஞர் முனைவர் ஜார்ஜ் ஹார்ட் அவர்களுக்குக் குறள்பீட விருதும், முதுபெரும் தமிழறிஞர் பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்களுக்குத் தொல்காப்பியர் விருதும், அகவை குறைந்த பேராசிரியர்கள் பதினைந்து பேருக்கு இளம் அறிஞர் விருதுகளும் ஆகிய பெருமை தரும் தேசிய விருது களை இந்தியக் குடியரசுத் தலைவர் நடுவண் அரசின் சார்பில் வழங்க உள்ளார்.

இந்திய அளவிலும் உலக அளவிலும் வீறுமிக்க அதிர்வுகளை விளைவித்துச் செம்மொழித் தமிழின் சீரிளமைத் திறத்தை முரசறைவதோடு புதுப்புதுத் தடங்களில் அதன் பரிமாணத்தை வளர்த்தெடுக்க வழிமுறைகளைக் கண்டறிந்து-ஒரு தொடரோட்டமாக இம்மாநாட்டுச் செயற்பாடுகள் வலுவாக அமைய வேண்டும் என்னும் முனைப்போடு தமிழக முதல்வர் கலைஞர் ஒவ்வொரு நாளும் தம் நெஞ்சிலும் நினைவிலும் செயற்களங்கள் திறந்து வைக்கிறார்.

அவருடைய சொல்லிலும் செயலிலும் உள்ள பொருண்மை அடுக்குகளில் தமிழ்மொழி சார்ந்த அக்கறை பொதிந்து இருப்பதை அறிகிறவர்கள்-எல்லாவற்றையும் அரசியற்படுத்திப்பார்ப்பதைப் பொருத்தம் இழந்த போக்காகவே கணிப்பார்கள். தேர்தல்-வெற்றி-பதவி என்கிற கட்சி சார்ந்த கண்ணோட் டங்களும், அவற்றை அடித்தளமாகக் கொண்டு கிளம்புகிற விமர்சனங்களும் இயல்பானவையெனினும்-இம்மாநாட்டைப் பொறுத்தவரை அரசியல் அடிப்படை யிலான அணுகுமுறைக்கு மாற்றாகத் தமிழ்மொழி அடிப்படையிலான அணுகுமுறையைக் காண்பதும் கடைப்பிடிப்பதுமே பொருத்தமாக இருக்க முடியும். ✥

எத்தகைய சூழ்நிலையில் இருப்பவர்களும், நம்மருமைத் தாய்மொழியாம் தமிழுக்கென இயற்றப்படும் முயற்சிகள் எத்தகைய சூழ்நிலையில் இருப்பினும் வரவேற்பதும் பங்குகொள்வதுமே இனவழி அறம் சார்ந்த கடமை என்று கருதுவர். தாய்மொழி கட்டமைத்துக் கொடுக்கும் பண்பாட்டுத் தளத்திலான உணர்வுநிலை, தமிழருக்கு மட்டுமில்லை தாய்மொழி பற்றிய பொதுத் தன்மையாக எந்நாட்டினர்க்கும் எவ்வினத்தவர்க்கும் இப்படித்தான் இருக்க முடியும்.

❖ இத்தலைவாயில் பகுதியின் நிறைவில் ஓர் எண்ணத்தை வெளிப்படுத்தலாம். நம் தாய்மொழியாம் தமிழ், செம்மொழித் தகுதியைத் தனது வரலாற்றாலும் வாழ்வு வளத்தாலும் பெற்றிருப்பினும், இந்திய அரசு ஆணைவழி அதற்கு ஒப்புகையும் உரிய ஆணையும் பெறத் தமிழக முதல்வர் கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே இயலுவதாயிற்று. செம்மொழிச் சிறப்பைத் தமிழகத் தமிழரும் உலகத்தமிழரும் பெருமித உணர்வோடு என்றென்றும் நினைப்பதற்கும் நெஞ்சம் களிப்பதற்கும் உரியர் எனினும், இச்சிறப்பும் இந்திய அரசு ஆணைவழி நிறுவப்பட்ட (12.10.2004) நாள் கல்வெட்டாகப் பதிவதற்கேற்ற வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் பன்னிரண்டாம் நாளைச் செம்மொழித் தமிழ்நாள் எனத் தமிழக அரசு ஆணைவழி அறிவித்து, அரசும், அரசுசார்ந்த அமைப்புகளும்-தமிழ் அமைப்புகளும், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகிய கல்வி நிறுவனங்களும் பொது மக்களும் கொண்டாடுவதற்கு வழிகோல வேண்டும். ◆


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும்

அயல் நாடுகளிலும் உள்ள

தமிழியல் அறிஞர்கள்,

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்

மற்றும்

படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்


# கட்டணம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/- | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 15, 000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. 10, 000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 3, 000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. 1, 500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*


அரிமா நோக்கு

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www. arimaanokku.com மின் அஞ்சல்: arimaa.nokku@gmail.com செல்: 9380626448